# ப்ராம்ப்டன் நகரில் விக்டோரியா தினம் 2022

ப்ராம்ப்ட்டன், ON (மே 17, 2022) – இந்த ஆண்டின் விக்டோரியா தினம் மே 23, திங்கட்கிழமையன்று நிகழ்கிறது.

தீயணைப்பு மற்றும் அவசரகாலச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், சட்ட அமலாக்கம், சாலைப்பணிகள், மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகியவை நமது சமூகத்தினருக்கு ஆதரவளிப்பதற்காக, வழக்கம்போல் தொடர்ந்து செயல்படும்.

ஏதேனும் விசாரிப்புக்களுக்கு குடியிருப்பு வாசிகள் 311 அல்லது 905.874.2000 (ப்ராம்ப்ட்டன் நகருக்கு வெளியில்) என்ற எண்களை அழைக்கலாம், Brampton 311 செயலியை [ஆப் ஸ்டோர்(App Store) அல்லது கூகிள் ப்ளே (Google Play) யில் கிடைக்கும்] உபயோகிக்கலாம்; www.311brampton.ca எனும் வலைத்தளத்திற்கு வருகை தரலாம் அல்லது 311@brampton.ca என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். ப்ராம்ப்ட்டன் நகரம் அல்லது பீல் பிராந்தியம் தொடர்பான விஷயங்களுக்கு 24/7 என்ற முறையில் நாங்கள் செயல்படுகிறோம்;

**பட்டாசு கொளுத்துவதில் பாதுகாப்பு**

ப்ராம்ப்ட்டன் நகரில் உரிமம் ஏதும் பெறத் தேவையில்லாமல், தனியார் இடங்களில் ஓரளவுக்கே பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படுகின்ற நான்கு நாட்கள் உள்ளன: விக்டோரியா தினம் என்பது, அவற்றில் ஒன்றாகும். உப சட்டத்தின்படி கனடா தினம், தீபாவளி மற்றும் புத்தாண்டு தினம் ஆகிய நாட்களிலும் பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படுகின்றது.

குறுகிய தூர வேடிக்கை பட்டாசு என்பது, தீப்பற்றியதும் 3 மீட்டர்கள் (10 அடி) தூரம் மட்டுமே செல்லக்கூடிய வகைகளாகும் (உதாரணமாக, தரைச் சக்கரம், புஸ்வாணம், கைச் சக்கரம் மற்றும் வெடிகள்). 10 அடி என்பது சுமாராக ப்ராம்ப்ட்டன் நகர பேருந்தின் உயரம் அல்லது கூடைப்பந்து வளையம் இருக்கும் உயரம் ஆகும்.

மற்ற ராக்கெட் வகை பட்டாசுகளுக்கு ப்ராம்ப்ட்டன் நகரில் அனுமதியில்லை. வீதிகளிலோ, பக்க வாட்டு நடைபாதைகளிலோ, நகரின் பூங்காக்களிலோ அல்லது நகராட்சி மற்றும் பள்ளி இருப்பிடங்களிலோ இந்த பட்டாசு வெடித்தல் செய்ய நகரவாசிகளுக்கு அனுமதியில்லை என்பதை நகர நிர்வாகம் நினைவூட்டுகிறது.

குறுகிய தூரம் சென்று வெடிக்கக் கூடிய பட்டாசுகளை உபயோகிக்கும்போது, குடியிருப்பு வாசிகள் பின் வரும் முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்:

:

- தீயை அணைக்கும் விதமாக ஒரு பாத்திரம் நிறைய தண்ணீர் வைத்துக்கொள்ள வேண்டும் அல்லது தண்ணீர் வரக்கூடிய குழாய் அருகில் வைத்துக்கொள்ள வேண்டும்
- மத்தாப்புக்கள் அல்லாத, வெடிக்கக் கூடிய ஒரு பட்டாசு போன்றவற்றை ஒருபோதும் கையில் பிடித்து பற்ற வைக்கலாகாது.
- மற்றவர்களை நோக்கி பட்டாசுகளை வீசாதீர்கள் அல்லது காட்டாதீர்கள்
- மத்தாப்புக்கள் எரிந்து முடிந்த பின்னர் அவற்றை அப்புறப்படுத்தும் முன்பாக தண்ணீர் நிறைந்த ஒரு பாத்திரத்தில் இடவும்.
- அப்புறப்படுத்தும் முன்பாக அனைத்து பட்டாசு வகைகளும் குளிர்விக்கப்பட வேண்டும்

ஒவ்வொரு வருடமும், பட்டாசு விற்பனையாளர்கள் அனைவரும் அவற்றை விற்பனை செய்ய உரிமம் பெறும் முன்பாக நகர நிர்வாகம் அளிக்கின்ற பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். நகர நிர்வாகம் விற்பனையாளர்களுக்கு ஆன்லைன் பயிற்சிவழங்கியது. இந்த வருடம் பட்டாசு விற்பனைக்கான எந்த உரிமமும் அளிக்கப்படவில்லை. ப்ராம்ப்ட்டன் நகரினுள்ளாக பட்டாசுகள் விற்பனை ஏதேனும் கடைகளில் நடைபெறுவதைப் பார்க்கும் நகர வாசிகள் அதுபற்றி ப்ராம்ப்ட்டன் 311 (Brampton 311)எனும் செயலி மூலமாகவோ, ஆன்லைனிலோ அல்லது 311 அல்லது 905.874.2000 (ப்ராம்ப்ட்டனுக்கு வெளியில்) எனும் எண்ணை அழைத்தோ புகார் தெரிவிக்கலாம்.

பட்டாசு கொளுத்துவதில் பாதுகாப்பு மற்றும் உபசட்டங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/fireworks.

**ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து**

விக்டோரியா தினம் அன்று, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையானது, ஞாயிற்றுக்கிழமையன்று அட்டவணைப்படி செயல்படும். அனைத்து பேருந்து முனையங்களிலும் வாடிக்கையாளர் சேவை கவுன்ட்டர்கள் மூடப்பட்டிருக்கும். தொடர்புக்கான மையமானது காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்தே இருக்கும்.

மாகாண ஒழுங்குமுறைகளின்படி அனைத்து ப்ராம்ப்ட்டன் நகர பேருந்துகளிலும் மற்றும் பேருந்து முனையங்களிலும் முக கவசங்கள் அணிவது தொடர்ந்து அவசியமாகும். பேருந்துகளை சுத்திகரிப்பு செய்வது அமலில் இருக்கிறது மற்றும் பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது சேவை புதுப்பிப்புக்களுக்கு @bramptontransit ஐ

ட்விட்டரில் பின்பற்றவும். கேள்விகள் இருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து தொடர்பு மையத்திற்கு 905.874.2999 என்ற எண்ணுக்கு அனுப்பி வைக்கலாம்.

**ப்ராம்ப்ட்டன் பூங்காக்கள்**

சுதந்திரமாக திரியும் நாய்களுக்கான பூங்காக்கள் உள்பட அனைத்து ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு ஓடுபாதைகள், விளையாட்டு மைதானங்கள், மற்றும் பூங்காக்கள் விக்டோரியா தினத்தில் திறந்திருக்கும். ஒவ்வொருவரின் உடல் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு உட்ல்ரீதியான செயல்பாடு முக்கியமாகும்! எங்கள் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கிற்கான ஓடுபாதைகள் எங்குள்ளன என அறிய வருகை தரவும்: www.brampton.ca/parks .

**ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு**

விக்டோரியா தினத்தில் ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு மையங்கள் திருத்தியமைக்கப்பட்ட நேரங்களில் திறந்திருக்கும். விடுமுறை நேரங்களை இங்கு காணலாம். நகரமெங்கிலுமாக ஸ்ப்ளாஷ் நீர்க்குளங்கள் இந்தப் பருவத்திற்காக மே 21, சனிக்கிழமையன்று, காலநிலை அனுமதிக்கும் பட்சத்தில், திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஸ்ப்ளாஷ் நீர்க்குளங்கள் இருக்குமிடங்கள், திறந்திருக்கும் நேரங்கள், இயங்கு தன்மை பற்றிய புது தகவல்களுக்கு இங்கு வருகைதரவும்.

பொழுதுபோக்கு மையங்கள் பற்றிய தகவல்களுக்கு, கிடைக்கவிருக்கும் திட்டங்கள், மற்றும் உருப்பினராவதற்கு மற்றும் பல விஷயங்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/recreation.

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

ப்ராம்ப்ட்டன் நூலக கிளைகள் விக்டோரியா தினத்திற்காக மே 22, ஞாயிற்றுக்கிழமை மற்றும் மே 23, திங்கட்கிழமை மூடப்படும்.

கல்விரீதியான, படைப்பாற்றல் வகையிலான மற்றும் தொழில்தகைமையான டிஜிட்டல் பிளாட்ஃபாரம் மற்றும் பலவகையான துறைசார்ந்த இ-புத்தகங்கள் மற்றும் ஆடியோ புத்தகங்கள், தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்களை www.bramptonlibrary.ca இல் கடனாக பெறலாம்.

எங்களின் நிகழ்வுகளுக்கான கால அட்டவணை மூலமாக அனைத்து வயதினருக்குமான மெய்நிகர் நிகழ்ச்சிகளுக்கு பதிவு செய்யவும் மற்றும் எங்கள் மின்னஞ்சல் வழி புதிய செய்திகளுக்கு பதிவு செய்துகொள்ளவும். Facebook, Twitter, Instagram, மற்றும் LinkedIn இல் எங்களைப் பின்பற்றவும் மற்றும் iOS மற்றும் Google Play யில் ப்ராம்ப்ட்டன் நூலக மொபைல் செயலியைப் பெற்று பதிவு செய்வதை உறுதி செய்யவும். எங்கள் செயலி பற்றிய மேலும் விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும். எங்கள் அலுவலக பணியாளர்களுடன் நேரலையில் பேச அல்லது ஒரு கேள்வி கேட்க எங்கள் வலைத்தளத்திற்கு வருகை தரவும்.

**ப்ராம்ப்ட்டன் விலங்குகள் சேவை**

ப்ராம்ப்ட்டன் விலங்குகள் காப்பகம் விக்டோரியா தினத்தில் மூடப்படும். விலங்குகள் கட்டுப்பாட்டு அமைப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் மாலை 6:30 வரையுயும் சாலைகளில் இயங்கும். இந்த நேரங்களுக்கு அப்பால், இந்த விலங்குகள் கட்டுப்பாட்டு அமைப்பு அவசர நிலைமைகளுக்கு மட்டுமே செவிசாய்க்கும்

**விக்டோரியா தின வார இறுதிக்கான பீல் பொது சுகாதார நினைவூட்டல்கள்**

கோவிட்-19 நமது சமூகத்தில் தொடர்ந்து பரவி வருவதால், இந்தக் கிருமிக்கு எதிராக பொதுமக்களின் சுகாதார நடவடிக்கைகளே நமது சிறந்த பாதுகாப்பாகும் என்பதை நினைவில் கொள்வது அவசியம். கோவிட்-19 பரவுவதைத் தடுப்பதில் எந்த ஒரு பொருளும் 100% பயனுள்ளதாக இருக்கவில்லை, ஆனால் அடுக்கடுக்கான பொது சுகாதார நடவடிக்கைகளை அமலில் வைப்பது சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது. இப்படியான பாதுகாப்பு அடுக்குகளில் அடங்குபவை:

- தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதல்.
- உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் போது வீட்டிலேயே இருந்து விடுதல்.
- உங்கள் கைகளை அடிக்கடி கழுவுதல்.
- இருமல் மற்றும் தும்மல்களை மூடிமறைப்பதன் மூலம் சரியான சுவாச நற்பண்புகளைக் கடைபிடித்தல்.

தேவைப்படும்போது உயர்தர முக கவசத்தைப் பயன்படுத்துதல்

பீல் பகுதியில் எங்கே எப்படி உங்களுக்கான கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்வது என்பது பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: peelregion.ca/coronavirus/vaccine/.

ஒன்ட்டாரியோவை பாதுகாப்பாக திறப்பதற்கான திட்டத்தில் இருக்கின்ற மாகாண வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ளவும்.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca